
வெளியீடு எண் 117.

# திருப்பறியலூர்த் திருப்பதிகம்



சம்பந்தர்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உடு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 117.

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

# திருப்பறியலூர்த் திருப்பதிகம்

இது
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உகு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவுள்ளத்தின்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
1946.

பிரதிகள் 500.

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

சிவமயம்

# பதிப்புரை

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் உடு-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சமய வளர்ச்சி கருதி ஆற்றி வரும் பணிகள் பலவாகும். அவைகளுள் திருப்பதிகங்கள் கொண்ட 274 சிவஸ்தலங்களிலும் ஆதீனச் சார்பில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அந்தந்தத் தலப்பதிகங்களையும் ஆங்காங்கு முறைப்படி ஓதுவித்து, ஆராதனை முடிவில் அத்தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு வழங்குதலும் ஒன்றாகும். ஆதலின் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படியே திருப்பறியலூர்த் திருப்பதிகம் என்னும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து ஸ்ரீவீரட்டேசுவரர் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

## வீரபத்திரர் துதி

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கனெச்சன் இந்து அனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரராற்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

அடைந்தவி யுண்டிடும் அமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாயகம் ஓடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

பலமெவையுந் தருநயன மூன்று காட்டிப்
பகருமருள் வடிவாகிக் கரங்க ளெட்டில்
வலமொளிவாள் கதையினொடு வயங்கு சூல
மழுப்படைமற் றிடப்பாலிற் கபாலங் கட்டம்
இலகுமணி யொடுமுசல மினைய தாங்கி
எய்துமடி யவ்விரிடுக்க ணவையும் வீட்டி
உலகிலுயர் பதியனக ரதனுள் வாழும்
ஒருவீர பத்திரனை யுளத்தில் வைப்பாம்.

உ

சிவமயம்

# திருத்தலச்சிறப்பு

திருப்பறியலூர் என்னும் இத்தலம் அட்ட வீரட்டத்துள் ஒன்று; சிவநிந்தனை செய்த தக்கன் யாகஞ்செய்த சிறப்புடையது. காவிரியின் தென்கரையிலுள்ளது. தலவரிசையில் இது 104வது தலமாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆலயத்தில் தக்கன் யாகத்தினை அழித்தற்குத் தோன்றிய வீரபத்திரமூர்த்தி எழுந்தருளியிருந்து அன்பர்கட்கு அருள் வழங்குகின்றார். இறைவன் வீரட்டேசுவரர். அம்மையார் இளங்கொம்பனையாள். தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களுள் இவ்வாலயமும் ஒன்றாகவிளங்குகிறது. இக்காலத்தில் பறசலூர் என வழங்கப்படுகின்றது. திருவிளையாடற் புராண ஆசிரியர் வசிட்டர் முதலிய முனிவர்கட்கு அகத்தியர் கூறும் கூற்றாக "எழுகச் சென்னிதன்னை

மங்கல மாமடற்கிந்த மருகனுர் இருக்கை காண்மின்" என்று இத் தலத்தைப்பற்றிக் கூறியிருப்பதும் காண்டற்குரியது

இத்தலம் தஞ்சை ஜில்லா மாயூரம் தாலுக்காவில், மாயூரமிருந்து தரங்கம்பாடி செல்லும் இருப்புப்பாதையிலுள்ள செம்பொனுர்கோயில் என்னும் புகைவண்டி நிலையத்திற்குத் தென்மேறகில் $1\frac{1}{4}$-கல் தொலைவில் விளங்குகிறது.

## தலப்பெயர்கள்

**தட்சபுரம்:-** பிரமன் புதல்வனுன தக்கன் தேவர்கள்சூழ மண்ணுலகம் வந்து இத்தலமே சிறந்ததென்று கருதி யாகஞ்செய்த இடமாதலால் இது தட்சபுரம் எனப் பெயர் பெற்றது.

**பறியலூர்:-** தாரகன் என்னும் அசுரனுல் தேவர்களுக்கு ஏற்பட்ட பயத்தை நீக்கிய

(பறித்த)தாலும், சவுனகர் சாபத்தால் வேடுவனாய்த் திரிந்த புற்கலன் இத்தலத்தின் பாங்கர் வந்த ஏழுமுனிவர்களது குடை திருவடி முதலியவற்றைப் பறித்துக்கொண்டமையாலும், இங்கு வந்து வழிபடுவோர்களது பாவங்களை இறைவன் பறித்தலாலும் பறியலூர் எனப் பெயர்பெற்றது. தக்க யாகத்துக்குவந்த தேவர்களின் தீமையைப் பறித்ததால் பறியல் எனப் பெயர்பெற்றது என்று மாயூர புராணம் கூறுகின்றது. "பயங்கிளர் நுங்கள் தீமை பறிசெய்தோம் இத்தேத்தற்ருல், தயங்குமித் தானமென்றும் பறியல் என்று ஓர்பேர் சார்க" என்பது அப்புராணப்பாடற் பகுதி.

## புராணவரலாறு

புற்கலன்வரலாறு:- மகளிர்களோடு கடல் நடுவில் நீர்விளையாடல் செய்துகொண்டிருந்த புற்கலன் என்பான், அப்பொழுது ஆங்கு வந்த சவுனகரை வணங்காது அவமதித்த

தால் அவர் சாபத்தினைபெற்று வேடுவனுகி அலைந்துகொண்டிருந்து முடிவில்இத்தலத்தை அடைந்தான். அப்போது இங்குவந்த ஏழு முனிவர்களது குடை முதலாயினவற்றைப் பறித்தான். பறித்தும் ஊழ்வினைப்பயன்வந்து ஊட்டுங் காலமாதலால் அவர்களுள் ஒருவராகிய அத்திரி முனிவருடைய வாட்டத்தைக் கண்டு மனமிரங்கி பறித்ததை மீட்டுங் கொடுக்கவே அத்திரி அதனைத் தன் கையால் வாங்கினுர். கரம் தீண்டிய விசேடத்தால் புற்கலன் நல்லறிவுபெற்று ஏனைய அறுவர்களது குடை, ஆடை முதலியவற்றையும் அவ்வாறே கொடுத்து அவர்களிடத்தில் உபதேசம்பெற்று ஜெபஞ்செய்து கொண்டிருந்தான். அதன்பயனுல் இறைவன் காட்சி அளிக்கக்கண்டு களித்து, அவராலே வால்மீகி என்னும் பெயரும்பெற்று இராமசரிதம்பாடி முத்தி எய்தினன்.

**தட்சயாகம்:-** பிரமன் சிவபரத்துவத்தை உபதேசிக்க, கேட்டுணர்ந்த தக்கன் முத்தி

யின்பத்தைப்பெற விரும்பாதவனாய், பிரமன் விட்டுணு முதலியோர்களைக் காட்டிலும் மேலானவளங்களைப்பெறவிரும்பினான். மானசவாவி என்னும் இடத்தை அடைந்து தவஞ் செய்து வேண்டியதுபெற்று, மேலும் உமை தனக்கு மகளாக வரவும் அம் மகளைப் பெருமான் மணஞ்செய்துகொள்ளவும் ஆகிய வரங்களையும் பெற்றான். பின்னர் வேதவல்லி என்பாளை மணந்து ஆயிரம் புதல்வர்களைப் பெற்று ஒவ்வொருவரையும், படைக்குந் தொழிலைப் பெற்றுவரும்படி அனுப்பினான். அவர்கள் யாவரும் அவ்வாறே சென்று தவம் புரிந்து நாரதர் உபதேசத்தால் வீட்டின்பத்தை அடைந்தார்கள். மறுமுறை ஆயிரம் புதல்வர்களையனுப்ப அவர்களும் அவ்வாறே ஆனார்கள்.

இவ்வாறாகிய நாரதர் சூழ்ச்சியை அறிந்த தக்கன் கோபமுற்று நாரதருக்கு உலகமெங்கும் உழன்று திரியும்படியாகச் சாபமளித்து'

இருபத்துமூன்று புதல்வியர்களைப் பெற்றுப் பலமுனிவர்களுக்கு மணஞ்செய்து கொடுத்து அதன்வழியாக சுற்றத்தார்களைப் பெருக்க லாயினன். இறுதியில் உமையம்மையாரையும் திருமகளாகப்பெற்று இறைவனுக்கு மணஞ்செய்து கொடுத்து அவரை மருமகனுகப்பெறும் பேற்றினையும் பெற்றான். பெற்றிருந்தும், திருமணத்தின்போது அம்மையாரைக் கைப்பற்றிய பெருமான் அப்போது மறைந்தருளி துன்பத்தைக் கொடுத்து மறுமுறையும் தக்கனுக்கு அறியாதபடி வந்து அம்மையாரை அழைத்துச் சென்றதாலும், மகளையும் மருமகனையும் கண்டு செல்லுதற் பொருட்டுக் கயிலைக்குச் சென்ற காலத்து வாயிலாளர்களால் தடுக்கப் பட்டதாலும தக்கன் இறைவனை மதியாதவனாய், வேதங்களால் தொழப்படும் ஒரு முழுமுதல்வனாகிய பெருமானுக்கு அவிகொடுக்கும் முறையினை நீக்கி விட்டுணுவுக்குக் கொடுத்து யாகஞ் செய்ய எண்ணினன். நாரதமுனிவருடன்

கலந்து யோசித்துப் பாரிசாதவனம் என்னும் இத்தலமே சிறந்ததென்று கருதி ஏவலாளர் களைக் கூவி யாகசாலை அமைக்கச்செய்தான். தக்கன் ஆணையின்படியே விட்டுணு முதலிய தேவர்கள் யாவரும் வந்து கூடினார்கள். வியாழகுரு யாகக்கிரியைகளைச் செய்யத் தொடங்கினர்.

இச் செய்தியை நாரதமுனிவரால் அறிந்த உமையம்மையார் யாகத்துக்குச் செல்ல விரும்பினள் செல்லுதலில் இறைவனுக்கு உடன்பாடில்லையாயினும் ஒருவாறு விடை பெற்று இத்தலத்துக்கு வந்தாள். வந்ததும், பிதாவாகிய தக்கனால் உபசரிக்கப்பெருமல் இருந்ததோடு அவன் அம்மையாரைப்பற்றி யும, பெருமானைப்பற்றியும் கூறிய கொடுஞ் சொற்களையும் கேட்டனள்; அதனால் மனம் பொருமல் " இந்தமாமகம் பொன்றுக; இமை யவர் சிதைக; நிந்தையே செய்த நீயும் இப் பொழுதே ஒழிக " எனச் சபித்துக் கயிலையை

யடைந்து பெருமானை வணங்கி நிகழ்ந்தன கூறினள்.

அம்மையார் அருளியதைச் செவியேற்ற பெருமான் வீரபத்திரக்கடவுளைக் கூவி "தக்கன் வேள்விச்சாலையை அடைந்து அவியினைத் தருகென மொழிவாய்; தாரானாயின் தேவர்களோடு அவனையும் அழிப்பாய்" என்று அருளலும், வீரபத்திரரும் உலகம் நடுங்கும்படி யாகவீரர்கள்சூழ யாகசாலையை அடைந்தார். பிரமனாதியோர் அஞ்சினார். தக்கன் மயங்கினான். சென்ற வீரபத்திரர் தக்கனை எம்பெருமானுக்குரிய அவியினைக் கொடு என்று கூறி அவன் மறுத்ததால், யாகத்தினையழிக்கத்தொடங்கினார். விட்டுணுவைத் தண்டாலடித்தும், பிரமனைக்குட்டியும், கலைமகளை மூக்கு அரிந்தும், சந்திரனைத் தேய்த்தும், சூரியன் பற்களை யுடைத்தும், யமன் தலையை வெட்டியும் துன்புறுத்தப் பட்டது. அக்கினி ஏழுநாக்குகளையும் இழந்

தான். பெண்மா னுருக்கொண்டு பயந்து ஓடிய எச்சன் தலையறுபட்டு வீழ்ந்தான். இவ்வாறுயாவரும் துன்புற்றுர்கள். ஆயினும் மழு மான் ஆகியவைகளை ஏந்தி இறைவனைப் போல் விளங்கும் உருத்திரகணங்களும், ஈசானனும் வீரபத்திரரால் துன்புறுத்தப் படாமல் அப்பாற்சென்றுர்கள்.

தேவராதியோர்கள் இவ்வாறு துன்புறு தலைக்கண்ட தக்கன் மனம்பதைத்து, "குரு மொழி கேட்டிலேன்; மகள் கூறியவற்றை எல்லாம் மறுத்துச் சீறினேன்; விட்டுணுவே முதற் பொருளென்று எண்ணினேன்; விதி வழியே மதிசாரும் என்பது எனக்குப் பலித்தது" என்று வருந்துகையில் வீர பத்திரர் எதிர் தோன்றி கூந்தலைப்பற்றி யவராய் "யாவரும் நகைப்ப பரமனை நிந்தித் தனையே; இதோபார் இவர்கள் உனது யாகத்துக்கு எழுந்தருளி அதனுற் பெறும் பயனை; உன்செருக்கு எங்கே சென்றது;

வேள்வி எங்கே?" என்று கூறிக்கொண்டு வாளினால் தலையையறுத்து அக்னிக்கு உணவாக்கினார்.

முன்னர், தண்டினால் அடிபட்டு வீழ்ந்த திருமால் மறுபடியும் எழுந்து மானம் தூண்ட கருடவாகனத்திலேறி வீரபத்திரரை நோக்கி "அவி ஈயேனென்ற தக்கனையன்றி ஏனையோரையும் அழித்தல் முறையோ" என்று கூறிக்கொண்டு யுத்தஞ்செய்ய முற்பட்டு வில்லினாலும், கதையினாலும் போர்புரிந்தார். ஒன்றும் பயன்படாமையால் இறுதியாகச் சக்கரத்தை ஏவினார். அதுகண்ட வீரபத்திரர் "இது எம்பெருமான் இவருக்குக் கொடுத்ததல்லவோ" என்று அதனைத் தன் கையாற் பற்றிக்கொண்டார். அதுவும் பயனுறாதொழியவே வாள்கொண்டு எதிர்க்க அது கண்ட வீரபத்திரர் ஊங்காரஞ் செய்தார். அதனால் உளம் நடுங்கி மண்ணில் வீழ்ந்த திருமாலின் முடியை வீரபத்திரர் துணிக்க

முற்படவே "செற்றம்நீங்குக" என அசரீரி உண்டாயிற்று. வீரபத்திரரும் செற்றம் நீங்கினர். பிரமனும் மாலும் அடிபணிந்து பிழைபொறுக்க வேண்டினர்.

இவ்வாறு இருக்கும்போது பெருமான் இடபாரூடராய்த் தோன்றவே மூவரும் அடி பணிந்து வணங்கிநின்றனர். வீரபத்திரரும் மால் பிரமர் வேண்டுகோட்படி "யாகத்து இறந்த யாவரும் எழுக" என்ன, துயி லொழிந்து எழுவார்போல யாவரும் எழுந் தனர். தக்கனுக்குமாத்திரம் ஆட்டுத்தலை யினைப்பொருத்தி எழச்செய்தார். எழுந்த தக்கன் முதலியோர் யாவரும் பெருமானை வணங்கி நிற்குங்கால் தக்கன் "பெருமானே! யான் செய் பழிதீர அவியருந்தி யாகத்தை முடித்து இத் தலத்திலேயே இலிங்கவடிவா யெழுந்தருளி யாவருக்கும் அருள் வழங்க வேண்டும். இத் தலமும் எனது பெயரால் வழங்கவேண்டும்" என்றுவிண்ணப்பித்தனன்.

பெருமானும் அவ்வாறே வரமருளி வீரபத்திரக்கடவுளை அருகிலே அமரச்செய்து தானும் இலிங்கவடிவாய் விளங்கினர்.

## பதிகக்குறிப்புக்கள்

தலம்:- மலர்நிறைந்த சோலைகள் சூழ்ந்தது; கொடிகள் விளங்குந் திருவீதியினையுடையது; அலைகள் நிறைந்த நீரினையுடையது; அன்னம் திளைக்கும் தடாகங்கள் சூழ்ந்தது; விளையுள் நிறைந்த வயல்களைக்கொண்டது.

வசிப்போர்:- திருத்தமுடையார், திருந்து மறையோர், சிறப்பாடுடையார்.

வரலாறு:- மூன்ருவது பாடலில் காமனை எரித்த வரலாறும், ஆருவது பாடலில் திரிபுரமெரித்தவரலாறும் கூறப்பட்டுள்ளன. இறைவன் திருநாமம் வீரட்டேசர். இறைவி திருநாமம் இளங்கொம்பன்னள்.

உ

சிவமயம்



# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

## பண் – மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமே லிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்தனெ னத்தகும் வீரட்டத் தானே. க

மருந்த னமுதன் மயானத்துண் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத் தானே. உ

குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தா னடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. ௫

பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்
சிறப்பா னுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ்சூழ வீரட்டத் தானே. ௬

கரிந்தா ரிடுகாட்டி லாடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட்டி லாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. ௭

அரவுற்ற நாணு வனலம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழச் செற்ருன்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத் தானே. சு

நரையார் விடையா னலங்கொள் பெருமான்
அரையா ரரவம் மழகா வசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. எ

வளைக்கும் மெயிற்றின் னரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே. அ

விளங்கொண் மலர்மே லயனோத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத்தழ லாய்நின்றான்
இளங்கொம் பனாளோ டிணைந்தும் பிணைந்தும
விளங்குந் திருப்பறியல் வீரட்டத் தானே. ௯

சடையன் பிறையன் சமண்சாக் கியரோ
டடையன் பிலாதா னடியார் பெருமான்
உடையன் புலியி னுரிதோ லரைமேல்
விடையன் றிருப்பறியல் வீரட்டத் தானே. ௧௦

நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவல மறும்பிறப் புத்தானே. ௧௧

திருச்சிற்றம்பலம்.